01.12.2016

தினமணி

# கேழ்வரகு விலை அதிகரிக்க வாய்ப்பு: வேளாண்மைத் துறை தகவல்



உற்பத்தி குறைவால், எதிர்வரும் நாள்களில் கேழ்வரகு விலை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக, வேளாண்மைத் துறை அறிவித்துள்ளது.

இது குறித்து, திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வணிகம்) வீ. மனோகரன் தெரிவித்துள்ளது:

சிறுதானிய பயிர்களில் பிரதானமாக உள்ள கேழ்வரகு, நாட்டில் சுமார் 1.20 மில்லியன் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. கர்நாடகம், தமிழகம், ஒடிசா, ஆந்திரம், உத்தரகாண்ட், மகாராஷ்ட்ரம், உத்தரபிரதேசம் மற்றும் ஹிமாசலப் பிரதேசம் ஆகிய இடங்களில் கேழ்வரகு சாகுபடி செய்யப்படுகிறது. டிசம்பர் மாத இறுதியில் தொடங்கும் கேழ்வரகு சந்தைக்கு பின்னர், ஆண்டு முழுவதும் சேமித்து வைக்கப்படுகிறது.

தமிழகத்தில் போதிய அளவு பருவமழை பெய்யாததால், கேழ்வரகு சாகுபடி குறைந்துள்ளது.

இதன் காரணமாக, எதிர்வரும் நாள்களில் கேழ்வரகின் விலை அதிகரிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுப்பதற்காக, கடந்த 10 ஆண்டுகளாக திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய கேழ்வரகு விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, தரமான கேழ்வரகின் பண்ணை விலை கிலோவுக்கு ரூ. 20 முதல் ரூ. 22 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் 1.15 லட்சம் ஹெக்டேரில் நெல்சாகுபடி: வேளாண் இணை இயக்குநர் தகவல்**



ராமநாதபுரம் மாவட்டத்தில் நிகழாண்டில் 1.15 லட்சம் ஹெக்டேரில் நெல்சாகுபடி செய்யப்பட்டிருப்பதாக வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.அரிவாசன் புதன்கிழமை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: ராமநாதபுரம் மாவட்டத்தில் பயிர் சாகுபடி வடகிழக்குப் பருவமழையை நம்பித்தான் இருக்கிறது. நிகழ் நிதியாண்டில் 1.15 லட்சம் ஹெக்டேரில் நெல்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழையை பொருத்து ஒவ்வொரு ஆண்டும்

நெல்,பருத்தி,பயறு,சிறுதானியங்கள், நிலக்கடலை, எள், மிளகாய் மற்றும் இதர குறுதானியங்கள் பயிர்சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு வடகிழக்குப் பருவமழை உரிய நேரத்தில் தொடங்கினாலும் போதிய அளவு பெய்யாததால் நெல்பயிர்கள் வளர்ச்சி குன்றி காணப்படுகிறது. தற்போது, நெல்பயிர்கள் வளர்ச்சி பருவம் முதல் இளம் தூர்கட்டும் பருவம் வரை உள்ளது. எனவே, தற்போது உள்ள மண்ணின் ஈரம் தாங்கி நெல்பயிர் வளர்வதற்கு ஏதுவாக சில உழவியல் முறைகளை மேற்கொள்ள அனைத்து விவசாயிகளும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பயிர்களை களைந்து பரிந்துரைக்கப்பட்ட பயிர் எண்ணிக்கையை பராமரிக்கலாம். வளர்ச்சிப் பருவமாக இருந்தால் 0.5 சதவீதம் பொட்டாஷ் கரைசலை தெளிக்கலாம்.

ஏக்கருக்கு ஒரு கிலோ பொட்டாஷ் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கலாம்.

தூர்கட்டும் பருவமாக இருந்தால் ஒரு சதவீதம் பொட்டாஷ் கரைசலை தெளிக்கலாம். ஏக்கருக்கு 2 கிலோ பொட்டாஷ் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கலாம்.

இதன் மூலம் நெல்பயிரிலிருந்து நீர் ஆவியாதல் கட்டுப்படுத்தப்பட்டு 7 முதல் 12 நாள்கள் வரை வறட்சியை தாங்கி வளரும் தன்மையை பெறுகிறது.

எனவே அனைத்து விவசாயிகளும் இம்முறைகளை கடைப்பிடிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓராண்டில் 8,000 மாமரக் கன்றுகள் நடவு: ஆட்சியர்**



ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓராண்டில் 8 ஆயிரம் மாமரக் கன்றுகள் நடப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் எஸ்.நடராஜன் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வேளாண்மைத்துறை சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உச்சிப்புளி அருகே நாகாச்சியில் மருத்துவரும், விவசாயியுமான திருமலைவேலுவுக்குச் சொந்தமான மாமரத் தோப்பை பார்வையிட்ட பின்னர் ஆட்சியர் செய்தியாளர்களிடம் கூறியது:

மாவட்டத்தில் ஓராண்டில் 8 ஆயிரம் மாமரக் கன்றுகள் நடப்பட்டுள்ளது. உச்சிப்புளி அருகே நாகாச்சி கிராமத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் திருமலைவேலுவின் வயலில் ஒரு மாமர கன்று ரூ.50 வீதம் 400 மாமர கன்றுகள் வழங்கப்பட்டு ஒராண்டு நிறைவு பெற்றுள்ளது. இவை அனைத்தும் 3 ஆண்டுகளுக்கு பிறகு ஒரு மரத்துக்கு 50 கிலோ வீதம் காய்க்கத் தொடங்கும், பின்னர் அவை வளர்ச்சியடைந்து 8 ஆண்டுகள் முடிவில் ஒரு மாதத்துக்கு 500 முதல் 1000 கிலோ வரை கிடைக்கும். அவவாறு கிடைக்கும் மாங்காய்களை ஒரு கிலோ ரூ.100 வரை விற்கலாம். ஒவ்வொரு மாங்காயும் ஒரு கிலோ இருக்கும் வகையில் பெருத்து காய்க்கும். இதே விவசாயிக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனமும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே. விவசாயிகள் மாகன்றுகளை வாங்கி நடவு செய்து அதிக வருவாயை குறைந்த ஆண்டுகளில் பெறலாம். இது தவிர ஊடுபயிராக தானியங்களையும் பயிரிட்டால் கூடுதல் வருமானமும் கிடைக்கும் என்று தெரிவித்தார்.

பேட்டியின் போது வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.அரிவாசன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை)வெள்ளைச்சாமி,தோட்டக்கலை அலுவலர் அழகேசன்,வேளாண்மை அலுவலர் அம்பேத்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**புயலில் மாயமான நாகை மீனவர்கள் யாழ்ப்பாணம் அருகே கரை அடைந்தனர்**

'நாடா' புயலில் மாயமான நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளக்கோவிலை சேர்ந்த நாட்டுப்படகு மீனவர்கள் 5 பேர் யாழ்ப்பாணம் அருகே கரை அடைந்தனர்.


தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள 'நாடா' புயல் வலுவிழந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வெள்ளிக்கிழமை கடலூர் - வேதாரண்யம் இடையே கரையை கடக்கும் எனவும் இதனால் மீனவர்கள் யாரும் மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் கடலில் உள்ள மீனவர்கள் உடனே கரைக்கு திரும்புமாறும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளக்கோவிலில் இருந்து செவ்வாய்கிழமை சங்கர் என்பவருக்குச் சொந்தமான பைபர் நாட்டுப்படகில் கடலுக்குச் சென்ற சங்கர், செல்வம், மூர்த்தி, பாலு, நடராஜன் ஆகியோர் வானிலை மாற்றம்

காரணமாக திசைமாறி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் அருகே காங்கேசன்துறை அருகே கரை அடைந்தனர்.

காங்கேசன்துறை மீன்வளத்துறையினரின் பொறுப்பில் உள்ள மீனவர்கள் வானிலை சீரடைந்ததும் தாயகம் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வலுவிழக்கிறது 'நாடா' புயல்: கடலோரப் பகுதிகளில் கனமழை நீடிப்பு**




செய்ற்கைக்கோள் படம்: வானிலை ஆய்வு மையம்

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவான 'நாடா' புயல் வலுவிழந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதேவேளையில், சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் இன்று (வியாழக்கிழமை) காலை தொடங்கி கனமழை நீடிக்கிறது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரிக்கு தென் கிழக்கே சுமார் 670 கி.மீ. தொலைவில் மையம் கொண்டிருந்த நாடா புயல், மேலும் வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, தமிழக கடற்கரையை நோக்கி நகர்ந்துகொண்டுள்ளது. இநதப் புயல் தற்போது வலுவிழக்கத் தொடங்கியிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடா புயல் நாளை (வெள்ளிக்கிழமை) காலை புதுச்சேரி - வேதாரண்யம் இடையே கடலூர் அருகில் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், கடலோர மாவட்டங்களில் பரவலாக கனமழையும், ஓரிரு இடங்களில் மிக கனமழையும் பெய்து வருகிறது. உள்மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்து வருகிறது.

சென்னையில் இன்று காலை தொடங்கி விட்டுவிட்டு கனமழை கொட்டி வருவதால் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் கனமழை பெய்தாலும், கடந்த ஆண்டைப்போல அதிகனமழை பெய்ய வாய்ப்பில்லை என்று பாலசந்திரன் நேற்று கூறியிருந்தது கவனிக்கத்தக்கது.

**தமிழக அமைச்சர் அறிவுறுத்தல்:**

இதனிடையே, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளதாக தெரிவித்த மாநில வருவாய்த் துறை அமைச்சர் உதயகுமார், "அரசின் முன்னேற்பாடுகள் தயார் நிலையில் இருப்பதால் மக்கள் அச்சப்படத் தேவையில்லை.

பேரிடர் பகுதிகளுக்கு பொதுமக்கள் யாரும் செல்ல வேண்டாம். மின் கம்பங்களில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அதிகாரபூர்வமான அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் யாரும் மீன்பிடிக்க செல்ல வேண்டாம். மழை தொடர்பாக மக்கள் வதந்திகளை நம்ப வேண்டாம்" என்றார்.

**முந்தையச் செய்திகள்:**

நாடா புயல் காரணமாக, மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்னை, கடலூர், நாகப்பட்டினம், காட்டுப்பள்ளி, புதுச்சேரி, பாம்பன், எண்ணூர்,

காரைக்கால், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் 2-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

**பள்ளிகளுக்கு விடுமுறை**

புயல் எச்சரிக்கையைத் தொடர்ந்து சென்னை உட்பட கடலோர மாவட்டங்களில் பள்ளிகளுக்கு 2 நாட்கள் விடுமுறை விடப்பட்டுள்ளது. இதுகுறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் எஸ்.கண்ணப்பன் கூறும்போது, "வங்கக் கடலில் உருவாகியுள்ள 'நாடா' புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் டிசம்பர் 1, 2 ஆகிய 2 நாட்கள் விடுமுறை விடப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் கடலோர பகுதியை ஒட்டியுள்ள மரக்காணம், வானூர் ஆகிய 2 தாலுகாவில் உள்ள பள்ளிகளுக்கும் விடுமுறை விடப்படுகிறது" என்றார்.

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: 'புயல் உருவாகியிருப்பதைத் தொடர்ந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகள் மற்றும் வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் வசிப்போரை அப்புறப்படுத்தி, நிவாரண மையங்களில் தங்க வைக்க உரிய ஏற்பாடுகளை செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**ஹெல்ப்லைன்கள்...**

அவசர நிலை ஏற்படும்போது 1070, 1077 ஆகிய இலவச தொலைபேசி எண்களை பொது மக்கள் தொடர்புகொள்ளலாம். மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம். அவர்களின் படகுகளை பாதுகாப்பான இடங்களில் நிறுத்த வேண்டும். ஆட்சியர் அறிவுறுத்தல்படி, பொது மக்கள் நிவாரண முகாம்களில் தங்கியிருக்க வேண்டும்.

இரு தேசிய பேரிடர் மீட்புப் படை, ஒரு மாநில பேரிடர் மீட்புப் படை ஆகியவை கடலூர், சென்னை, நாகப்பட்டினம் ஆகிய 3 இடங்களில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

**ஓமன் சூட்டிய 'நாடா' பெயர்**

சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், புயல்களுகக்கு பெயர் சூட்டுவதை ஒழுங்குபடுத்தியுள்ளது. அதன்படி, ஒவ்வொரு பிராந்தியத்திலும் உள்ள நாடுகள் ஒன்றிணைந்து புயலுக்கு பெயர் வைக்கும் முறையை ஏற்படுத்தியுள்ளன. கடந்த நவம்பரில் உருவான புயலுக்கு 'கியாந்த்' என மியான்மர் நாடு பெயரிட்டது. தற்போது உருவாகியுள்ள புயலுக்கு 'நாடா' என்ற பெயரை ஓமன் சூட்டியுள்ளது. நாடா என்பதற்கு ஓமன் மொழியில் 'பெருந்தன்மை' என்று பொருளாம் அடுத்த புயலுக்கு 'வர்தா' என பாகிஸ்தான் பெயர் சூட்டும்.

**பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்: பேரிடர் மேலாண்மை குழும உறுப்பினர் ஆய்வு**

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழையை எதிர்கொள்ள எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் திருப்தி கரமாக உள்ளதாக தேசிய பேரிடர் மேலாண்மைக் குழும உறுப்பினர் என்.சி.மார்வா கூறியதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த மழையின் காரணமாக, சென்னை உட்பட பல மாவட்டங்கள் வெள்ளத்தில் தத்தளித்தன. இந் நிலையில், இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது அதுபோன்ற நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, பல் வேறு முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை தமிழக அரசு எடுத்துள் ளது. மாநில அளவிலும், மாவட்டங்கள்தோறும் ஐஏஎஸ் அதிகாரிகள் தலைமையில் குழுக் கள் அமைக்கப்பட்டு, நீர்வழித் தடங்கள் தூர்வாரப்பட்டன. ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

இந்நிலையில், தேசிய பேரிடர் மேலாண்மைக் குழும (என்டிஎம்ஏ) உறுப்பினர் லெப்டினன்ட் ஜெனரல் என்.சி.மார்வா நேற்று முன்தினம் (29-ம் தேதி) சென்னை வந்தார். வடகிழக்கு பருவமழை பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் தமிழக அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அவர் கடந்த 2 நாட்களாக ஆய்வு செய்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

என்டிஎம்ஏ உறுப்பினர் மார்வா ஆய்வின்போது தமிழகத்தில் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் செய்யப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை தமிழக வருவாய் நிர்வாக ஆணையர் கே.சத்யகோபால் விரிவாக விளக்கினார். அதிகம் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளை கண்டறிந்து, அங்கு பல்வேறு துறையினர் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதையும், நீர்நிலைகள், நீர்வழித்தடங்களை உள்ளூர் மக்களின் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டதையும் எடுத் துரைத்தார்.

அதைத் தொடர்ந்து, தமிழக தலைமைச் செயலாளர் பி.ராம மோகன ராவை மார்வா சந்தித்தார். அப்போது, மாநில, மாவட்ட மற்றும் தாலுகா அளவில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள், எடுக் கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக விரிவாக ஆலோ சனை நடத்தினார். இந்த சந்திப் பின்போது, வருவாய்த்துறை செயலர் பி.சந்திரமோகன், நிதித் துறை செலவினப் பிரிவு செயலர் பி.செந்தில்குமார் ஆகியோர் இருந்தனர்.

மேலும், இந்த சந்திப்பின் நிறைவில், கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில், இந்த ஆண்டு தமிழக அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு தமிழக தலைமைச் செயலாளரிடம் பாராட்டு தெரிவித்த என்டிஎம்ஏ உறுப்பினர் மார்வா, பணிகள் திருப்தியாக இருப்பதாக தெரிவித்தார். பின்னர் எழிலக வளாகத்தில் உள்ள மாநில விரைவு சேவை மைய கட்டுப்பாட்டு அறையை

பார்வையிட்ட அவர், அங்கிருந்த அலுவலர்களிடம் உரையாடினார். மாநில அளவில் அதிகாரிகளை தொடர்புகொள்ள ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

**‘நாடா’ புயல் கடலூர் அருகே நாளை கரையைக் கடக்கிறது: தமிழகத்தில் கனமழை எச்சரிக்கை**



கோப்புப் படம்: ஆர்.ரகு

**5 மாவட்டங்களில் உஷார் நிலை: பள்ளிகளுக்கு 2 நாள் விடுமுறை**

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக மாறியுள் ளது. அதற்கு ‘நாடா’ என பெயரிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழக கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. சென்னை உட்பட 4 மாவட்ட பள்ளி களுக்கு 2 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு அதிக மழை தரக் கூடிய வடகிழக்கு பருவமழை, இந்த ஆண்டு தாமதமாக கடந்த அக்டோபர் இறுதியில் தொடங் கியது. நவம்பரில் சராசரியாக 32 செ.மீ. மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் 10 செ.மீ. மழை மட்டுமே பெய்தது. இந்நிலையில் தற்போது வங்கக் கடலில் உருவாகி யுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை, வலுப்பெற்று புயல் சின்னமாக மாறியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் நிருபர்களிடம் நேற்று கூறியதாவது:

தென்மேற்கு வங்கக் கடலில் வலுவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகியிருந்தது. அது தொடர்ந்து வலுப்பெற்று இன்று (புதன்கிழமை) காலை புயலாக மாறியுள்ளது. அதற்கு 'நாடா' என்று பெயரிடப்பட்டுள் ளது. தற்போது அந்தப் புயல் சின்னம், புதுச்சேரிக்கு தென் கிழக்கே சுமார் 670 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது.

இது மேலும் வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, தமிழக கடற்கரையை நோக்கி நகரக்கூடும். இதன்காரண மாக நாளை (இன்று) அதிகாலை முதல் தமிழக கடலோரப் பகுதிகளில் மிதமான மழையாக தொடங்கி, பின்னர் கனமழையாக பெய்யும்.

'நாடா' புயல் 2-ம் தேதி அதிகாலை புதுச்சேரி - வேதாரண் யம் இடையே கடலூர் அருகில் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது 45 முதல் 65 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும். கடலோர மாவட்டங்களில் பரவலாக கனமழையும், ஓரிரு இடங்களில் மிக கனமழையும் பெய்யக்கூடும். பிறகு படிப்படியாக உள்மாவட்டங்களில் மழை அதிகரிக்கும்.

**புயல் எச்சரிக்கை கூண்டுகள்**

மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது. சென்னை, கடலூர், நாகப்பட்டினம், காட்டுப்பள்ளி, புதுச்சேரி, பாம்பன், எண்ணூர், காரைக்கால், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் 2-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப் பட்டுள்ளது.

இதுவரை கிடைத்த வானிலை தகவல்களின் அடிப்படையில், சென்னையில் கனமழை பெய்யும். ஆனால், கடந்த ஆண்டைப்போல அதிகனமழை பெய்ய வாய்ப் பில்லை. இவ்வாறு பாலசந்திரன் கூறினார்.

**பள்ளிகளுக்கு விடுமுறை**

புயல் எச்சரிக்கையைத் தொடர்ந்து சென்னை உட்பட கடலோர மாவட்டங்களில் பள்ளி களுக்கு 2 நாட்கள் விடுமுறை விடப் பட்டுள்ளது. இதுகுறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் எஸ்.கண்ணப்பன் கூறும்போது, ''வங்கக் கடலில் உருவாகியுள்ள 'நாடா' புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், நாகப் பட்டினம் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் டிசம்பர் 1, 2 ஆகிய 2 நாட்கள் விடுமுறை விடப்படுகிறது. விழுப் புரம் மாவட்டத்தில் கடலோர பகுதியை ஒட்டியுள்ள மரக்காணம், வானூர் ஆகிய 2 தாலுகாவில் உள்ள பள்ளிகளுக்கும் விடுமுறை விடப் படுகிறது'' என்றார்.

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள தாவது: 'புயல் உருவாகியிருப் பதைத் தொடர்ந்து, முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கு மாறு அனைத்து மாவட்ட ஆட்சி யர்களுக்கும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. தாழ்வான பகுதிகள் மற்றும் வெள்ளம் ஏற்பட வாய்ப் புள்ள பகுதிகளில் வசிப்போரை அப்புறப்படுத்தி, நிவாரண மையங் களில் தங்க வைக்க உரிய ஏற்பாடுகளை செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவசர நிலை ஏற்படும்போது 1070, 1077 ஆகிய இலவச தொலைபேசி எண்களை பொது மக்கள் தொடர்புகொள்ளலாம். மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம். அவர்களின் படகுகளை பாதுகாப்பான இடங்களில் நிறுத்த வேண்டும். ஆட்சியர் அறிவுறுத்தல்படி, பொது மக்கள் நிவாரண முகாம்களில் தங்கியிருக்க வேண்டும்.

இரு தேசிய பேரிடர் மீட்புப் படை, ஒரு மாநில பேரிடர் மீட்புப் படை ஆகியவை கடலூர், சென்னை, நாகப்பட்டினம் ஆகிய 3 இடங்களில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**ஓமன் சூட்டிய ‘நாடா’ பெயர்**

சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், புயல்களுக்கு பெயர் சூட்டுவதை ஒழுங்குபடுத்தியுள்ளது. அதன்படி, ஒவ்வொரு பிராந்தியத்திலும் உள்ள நாடுகள் ஒன்றிணைந்து புயலுக்கு பெயர் வைக்கும் முறையை ஏற்படுத்தியுள்ளன. கடந்த நவம்பரில் உருவான புயலுக்கு ‘கியாந்த்’ என மியான்மர் நாடு பெயரிட்டது. தற்போது உருவாகி யுள்ள புயலுக்கு ‘நாடா’ என்ற பெயரை ஓமன் சூட்டியுள்ளது.

**‘நாடா’ புயலை எதிர்கொள்ள 176 நிவாரண மையங்கள் தயார்: சென்னை மாநகராட்சி நடவடிக்கை**



கோப்பு படம்: எம்.பெரியசாமி

புயல் எச்சரிக்கையைத் தொடர்ந்து 176 நிவாரண மையங்களை சென்னை மாநகராட்சி தயார் நிலையில் வைத்துள்ளது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது: வங்கக் கடலில் உருவாகியுள்ள ‘நாடா’ புயலை எதிர்கொள்ள சென்னை மாநகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன்படி, மழைநீர் தேங்க வாய்ப்புள்ளதாக அடையாளம் காணப்பட்ட 34 இடங்களில் மீட்புப் பணிகளில் ஈடுபட 108 மோட்டார் பொருத்தப் பட்ட படகுகள் தயார் நிலையில் உள்ளன. பொதுமக்களை தங்க வைப்பதற்காக 176 நிவாரண மையங்களும், 4 பொது சமையல் கூடங்களும் தயார் நிலையில் உள்ளன.

மழைக்காலங்களில் தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கவும், கொசுக்களை கட்டுப் படுத்தவும் 3,337 தொழிலாளர்களுடன் 420 அழுத்த தெளிப்பான்கள், கைகளால் இயக்கும் 245 புகையடிக்கும் கருவிகள் மற்றும் 41 வாகன புகையடிக்கும் கருவிகளும் வைக்கப்பட்டுள்ளன.


மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும் தலா ஓர் ஐஏஎஸ் அதிகாரி என 15 அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்காணித்து வருகின்ற னர். இதுமட்டுமல்லாது, மாநகராட்சி மூலம் பராமரிக்கப்படும் 16 சுரங்கப்பாதைகள், நெடுஞ் சாலைதுறையின் பராமரிப்பில் உள்ள 6 சுரங்கப்பாதைகளில் உயர்அழுத்த மின் மோட்டார்கள், சூப்பர் சக்கர் வாகனங்கள் தயாராக உள்ளன. ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு குழு வீதம் மீட்புப் பணிகளில் ஈடுபட மீட்புக் குழுவினர் அமர்த்தப்பட்டுள்ளனர். தேசிய பேரிடர் மீட்பு குழுவைச் சேர்ந்த 40 வீரர்களுடன் 4 மிதவை மீட்பு படகுகள் அரக்கோணத்தில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள 18 உயர் மின்கோபுர விளக்குகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தங்கள் புகார்களை தெரிவிக்க மாநகராட்சி மூலம் 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. 044-25619206, 25619511, 25384965, 25383694, 25367823, 25387570 என்ற தொலைபேசி எண்களிலும், 9445477207, 9445477203, 9445477206, 9445477201, 9445477205 ஆகிய வாட்ஸ்அப் எண்களிலும் பதிவு செய்யலாம். பெறப்படும் புகார்களை சம்பந்தப்பட்ட மண்டலங்களுக்கு அனுப்பி உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**சம்பா பயிர் கருகிய வருத்தம்: விஷம் குடித்த விவசாயி பலி**

திருவாரூர்: திருவாரூர் அருகே, சம்பா பயிர் கருகியதால், விஷம் குடித்த விவசாயி இறந்தார். திருவாரூர் மாவட்டம், முசிரியம் கிராமத்தை சேர்ந்தவர் சேகர், 51; விவசாயி. இவருக்கு மனைவி, இரு மகன்கள் உள்ளனர். இவர், 2 ஏக்கர் நிலத்தில், சம்பா நடவு செய்திருந்தார். விவசாயம் மற்றும் வீடு கட்ட, கடன் வாங்கியுள்ளார். காவிரி தண்ணீர் இல்லாமல், சம்பா பயிர் கருகியதால், மன வருத்தத்தில் இருந்த சேகர், நவ., 24ல் விஷம் குடித்தார். திருவாரூர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளித்தும், பலனின்றி நேற்று இறந்தார்.

## மேட்டுப்பாளையம் வனப்பகுதியில் வறட்சி வன முதன்மை :



வறட்சி ஏற்பட்டுள்ள மேட்டுப்பாளையம் வனப்பகுதியில் தமிழக முதன்மை வன உயிரின பாதுகாவலர் வி ஆய்வு மல்கானி.கே. .மேற்கொண்டார்

கடும் வறட்சி

கோவை வனக்கோட்டத்திற்கு உட்பட்ட கோவை, போளுவாம்பட்டி, மதுக்கரை, பெரியநாயக்கன்பாளையம், காரமடை, மேட்டுப்பாளையம், சிறுமுகை மற்றும் அதை சுற்றியுள்ள வனப்பகுதிகளில் ஏராளமான வன விலங்குகள் உள்ளனபரு வடகிழக்கு தற்போது .வமழை பொய்த்துவிட்டதால் வனப்பகுதிகளில் கடும் வறட்சி நிலவுகிறது.

வறட்சி காரணமாக மேட்டுப்பாளையம், சிறுமுகை மற்றும் அதனை சுற்றியுள்ள அடர்ந்த வனப்பகுதிகளில் செடி, கொடிகள் காய்ந்து விட்டனவிட்டதால் வறண்டு நிலைகள் நீர் மேலும் ., காட்டுத்தீ ஏற்படும் அபாயம் உள்ளது.

ஆய்வு

இந்த நிலையில் மேட்டுப்பாளையம் வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள வறட்சியில் இருந்து வனவிலங்குகளை காக்கவும், வனவிலங்குகள் மலைப்பகுதியையொட்டி உள்ள விளைநிலங்களில் புகுவதை தடுக்கவும் எடுக்கப்பட்டு உள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்ய தமிழக முதன்மை வன உயிரின பாதுகாவலர் வி காலை நேற்று மல்கானி.கே.11 மணிக்கு மேட்டுப்பாளையம் அரசு உள்ள ரோட்டில் கோத்தகிரி .வந்தார் வளாகத்திற்கு மரக்கிடங்கு

பின்னர் அவர், அங்குள்ள ஜக்கனாரி பிரிவில் வனவிலங்குகளின் தாகத்தை தீர்ப்பதற்காக கட்டப்பட்ட தண்ணீர் தொட்டிகள், நீர்நிலைகளுக்கு அருகே வைக்கப்பட்டு உள்ள உப்பு கட்டிகள், தானிய வில்லைகள், தொங்கு மின்வேலி ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார் வனப்பகுதியில் அதன்பின்னர் . புள்ளிக்குட்டை உள்ள, தூர்வாரப்பட்ட கசிவுநீர் குட்டை, மழைநீர்

வாய்க்கால் ஆகியவற்றை பார்வையிட்டார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை

அப்போது அவருடன், கூடுதல் முதன்மை வன உயிரின பாதுகாவலர் ரகுராம் சிங், மாவட்ட வன அலுவலர் ராமசுப்பிரமணியன், வனச்சரகர்கள் நசீர், மனோகரன் மற்றும் வனத்துறையினர் உடன் இருந்தனர் தமிழக பின்னர் ஆய்வுக்கு . ல்ம.கே.வி பாதுகாவலர் உயிரின வன முதன்மைகானி நிருபர்களுக்கு பேட்டியளித்தார் :கூறியதாவது அவர் அப்போது .

வடகிழக்கு பருவமழை 25 முதல் 30 சதவீதம் வரை மட்டுமே பெய்துள்ளது வறட்சி கடும் வனப்பகுதியில் இதனால் . மழை தினங்களில் சில இன்னும் இருப்பினும் .நிலவுகிறது பெய்யாவிட்டால் மழை அவ்வாறு .பெய்யக்கூடும் வனவிலங்குகளுக்கு கடும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் . முன் தேவையான மூலம் வனத்துறை போக்க அதனை .உள்ளது மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எச்சரிக்கை மார்ச் காலமான கோடை பொதுவாக, ஏப்ரல் மாதங்களில் காட்டுத்தீ ஏற்படும் வனப்பகுதியில் தற்போது ஆனால் . ரகா வறட்சி ஏற்பட்டுள்ளணமாக முன்கூட்டியே காட்டுத்தீ ஏற்பட வாய்ப்பு உள்ளது.

ஒத்துழைப்பு தர வேண்டும்

இதனை தடுக்க தீத்தடுப்பு கோடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது புதிதாக வனப்பகுதியில் இதுதவிர . கசிவுநீர்குட்டைகள், தடுப்பணைகள் கட்ட ரூ.4 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை செலவு ஆகும் கசிவுநீர் பழைய ஆனால் . .ரூ தூர்வார குட்டைகளை1 லட்சம் வரை தான் செலவாகும் . வன .குறையும் செலவினம் ஏற்படும் அரசுக்கு இதனால் வன .முக்கியம் எங்களுக்கு தான் பாதுகாப்பு உயிர்களின் நடவடிக்கைக்கு மேற்கொள்ளும் அரசு பாதுகாக்க உயிரினங்களை புஒத்துழைப் முழு பொதுமக்கள் தர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## நபார்டு வங்கி மூலம் 2017–18–ம் ஆண்டில் ரூ.6 ஆயிரத்து 940 கோடி கடன் வழங்க இலக்கு விவசாயத்துக்கு ரூ.4,847 கோடி ஒதுக்கீடு



நபார்டு வங்கி மூலம் 2017–18–ம் ஆண்டில் ரூ.6 ஆயிரத்து 940 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதில் விவசாயத்துக்கு மட்டும் ரூ.4,847 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது.

வங்கியாளர்கள் கூட்டம்

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட வங்கியாளர்கள் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில், 2017–18–ம் ஆண்டுக்கான நபார்டு வங்கியின் வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையை மாவட்ட கலெக்டர் டி.ஜி.வினய் வெளியிட்டார். அப்போது, அவர் கூறியதாவது:–

நபார்டு வங்கியின் வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கை ரிசர்வ் வங்கியின் முன்னோடி கடன் வழிமுறைகள், அரசு திட்டங்கள், மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்படும் கட்டமைப்புகள், வங்கி

மற்றும் அரசு துறைகளின் ஆலோசனைகள், புள்ளி விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு உள்ளது.

<u>கடன் இலக்கு</u>

இந்த திட்ட அறிக்கை 2022–ம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்கு அதிகரித்தல், சுற்றுச்சுழல் மாற்றத்தினை எதிர்கொள்வது போன்ற கொள்கையின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டு இருக்கிறது. மொத்தம் ரூ.6 ஆயிரத்து 939 கோடியே 82 லட்சம் மதிப்பீட்டில் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

அந்த வகையில், ரூ.4 ஆயிரத்து 847 கோடியே 17 லட்சம் விவசாய துறைக்கு ஒதுக்கப்பட்டு உள்ளது. இதில் குறுகிய கால பயிர் கடன் வழங்க மட்டும் ரூ.2 ஆயிரத்து 576 கோடியே 93 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதைத்தவிர சிறு, குறு தொழில் தொடங்க கடன், கல்வி கடன், வீட்டு வசதி கடன், ஏற்றுமதி கடன், மரபு சாரா எரிசக்தி கடன் போன்ற கடன்களும் வழங்கப்பட இருக்கின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சந்திரசேகரன், நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் சஞ்சீவி, கனரா வங்கி உதவி மேலாளர் மணிவண்ணன் மற்றும் வங்கி அதிகாரிகள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## நாமகிரிப்பேட்டையில் ரூ.7 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்



நாமகிரிப்பேட்டையில் நேற்று நடந்த ஏலத்தில் ரூ.7 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் போனது.

<u>மஞ்சள் ஏலம்</u>

ராசிபுரம் அருகேயுள்ள நாமகிரிப்பேட்டையில் உள்ள ராசிபுரம் தாலுகா கூட்டுறவு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை சங்க கிளை வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. வழக்கம்போல் நேற்றும் மஞ்சள் ஏலம் நடந்தது.

இந்த ஏலத்தில் நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி, புதுப்பட்டி, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்வதற்காக ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். மஞ்சளை ஏலம் எடுப்பதற்காக சேலம், ஈரோடு, நாமகிரிபேட்டை, ஒடுவன்குறிச்சி உள்பட பல பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்து மஞ்சளை ஏலம் எடுத்தனர்.

<u>ரூ.7 லட்சத்திற்கு ஏலம்</u>

நேற்று நடந்த ஏலத்தில் விரலி ரகம் 82 மூட்டைகளும், உருண்டை ரகம் 42 மூட்டைகளும், பனங்காலி ரகம் 1 மூட்டையும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.8,889–க்கும், அதிகபட்சமாக ரூ.9,419–க்கும், உருண்டை ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.7,969–க்கும், அதிகபட்சமாக ரூ.8,229–க்கும், பனங்காலி ரகம் குறைந்தபட்சம் குவிண்டால் 1–க்கு 13,800–க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில் 125 மஞ்சள் மூட்டைகள் ரூ.7 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது.

## உறைபனி பொழிவால் கருகும் தேயிலை செடிகள் பாதுகாக்க விவசாயிகள் தீவிர நடவடிக்கை



நீலகிரி மாவட்டத்தில் உறைபனி பொழிவால் தேயிலை செடிகள் கருகுகின்றன. தேயிலை செடிகளை பாதுகாக்க விவசாயிகள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு உள்ளனர்.

<u>உறைபனி பொழிவு</u>

நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறாக முன்கூட்டியே உறைபனி பொழிவு தொடங்கி உள்ளது. இதன் காரணமாக மாலையில் தொடங்கி மறுநாள் காலை வரை கடும் குளிர் நிலவுகிறது. இந்த குளிர் காரணமாக தொழிலாளர்கள், பொதுமக்கள், பள்ளி மாணவ–மாணவிகள் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர். காலை நேரத்தில் புற்களின் மீது உறைபனி கொட்டி கிடக்கிறது. இந்த உறைபனி பொழிவு காரணமாக தேயிலை செடிகள், புற்கள், காய்கறி செடிகள் கருகி வருகின்றன.

<u>அலங்கார செடிகள்</u>

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் அலங்கார செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளன. இந்த அலங்கார செடிகள் உறைபனியால் கருகாமல் இருக்க தினந்தோறும் மாலை நேரத்தில் பிளாஸ்டிக் கவர் கொண்டு மூடி பாதுகாக்கப்படுகிறது. பின்னர் மறுநாள் காலை சற்றுலா பயணிகள் பார்வையிட வசதியாக பிளாஸ்டிக்கவர் அகற்றப்படுகிறது.

மேலும் நீலகிரி நிலவும் வறட்சி காரணமாக ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. மேலும் பனிப்பொழிவால் புல்வெளியில் உள்ள புற்கள் கருகாமல் இருக்க தினமும் காலை நேரத்தில் பாப்–அப் முறையில் புல்வெளிக்கு தண்ணீர் பாய்ச்சப்பட்டு வருகிறது.

கருகும் தேயிலை செடிகள்

குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள குன்னூர், மஞ்சூர், கோத்தகிரி, கூடலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தேயிலை செடிகள் கருகுவதால் பச்சை தேயிலை மகசூல் குறைந்து வருகிறது. எனவே தேயிலை செடிகள் கருகாமல் இருக்க தாவே மற்றும் காட்டுச்செடிகளை கொண்டு தேயிலை செடிகளை விவசாயிகள் மூடி பாதுகாத்து வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, நீலகிரியில் பருவமழை போதிய அளவு பெய்யாததால் மாவட்டம் முழுவதும் வறட்சி நிலவுகிறது. இந்த நிலையில் உறைபனி பொழிவு தொடங்கி உள்ளதால் தேயிலை செடிகள் கருகி வருகின்றன. தேயிலை கொழுந்துகள் பனிக்கு எளிதாக கருகி விடுவதால் பச்சை தேயிலை மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. 100 கிலோ வரை எடுக்க வேண்டிய இடத்தில் வெறும் 30 முதல் 40 கிலோ வரைதான் பச்சை தேயிலை மகசூல் கிடைக்கிறது. இதனால் எங்களது வருமானம் முற்றிலும் பாதிக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

காய்கறி மகசூல் பாதிப்பு

இதேபோல் காய்கறி பயிர்களும் போதிய தண்ணீர் இன்றி கருகுகின்றன. குன்னூர் அருகே உள்ள பெட்டட்டி, கட்டபெட்டு போன்ற பகுதிகளில் காய்கறி பயிரிடப்பட்டு உள்ளது. தற்போது முட்டைகோஸ், காலிபிளவர், பீன்ஸ், கேரட் ஆகியவை பயிரிடப்பட்டு உள்ளது. மலை காய்கறிகளை பொருத்த வரை தினசரி தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நிலை இருந்து வருகிறது.

இதனை கருத்தில் கொண்டே மலை காய்கறிகளை பயிரிடும் விவசாயிகள் நீர்பாய்ச்சலான இடங்களில் அதிகளவு காய்கறி பயிரிட்டு வருகின்றனர்.

மழை இல்லாததால் பயிரிடப்பட்டுள்ள முட்டைகோஸ், காலிபிளவர், பீன்ஸ், கேரட் ஆகிய மலைப்பயிர்கள் தண்ணீர் இல்லாமல் விளைச்சல் குறைவாக உள்ளது. மேலும் தற்போது நிலவும் சீதோஷ்ண நிலையால் காய்கறி பயிர்களில் பூச்சி தாக்குதல் உள்ளது. முட்டைகோஸ் பயிர் எடை கூடாமல் இருக்கிறது. இதனால் விவசாயிகள் போதிய மகசூல் இல்லாததால் பாதிக்கப்பட்டு உள்ளனர். முட்டைக்கோஸ் ஒரு கிலோ 10 ரூபாய் இருந்து 3 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது. இதன் காரணமாக விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டு இருக்கிறது.